# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 87/2024

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, பெஞ்ச் கிளரர்க் கிரேடு –III என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் கோபால கிருஷ்ணன் வா.சா.–1 | சாதி |
| த/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

முதல் விசாரணை 03–04–2025.

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1 வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

கடந்த 02–11–2023 ம் தேதியில் நான் 10–47–பி2 வீட்டிற்கு செலுத்திய வீட்டு வரி ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.–1** ஆகும். 02–11–2023 ம் தேதியில் நான் செலுத்திய கதவு எண்,10–47–பி3 வீட்டிற்கு செலுத்திய வீட்டு வரி ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.–2** ஆகும். 18–07–2024 ம் தேதியில் நான் செலுத்திய மின் கட்டண ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.–3** ஆகும். 16–07–2024 ம் தேதியில் விஏஓ அளித்த சர்வே எண்.140/504 ஏ நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா அசல் **வா.சா.ஆ.–4** ஆகும். 14–12–2001 ம் தேதியில் 1 ம் பிரதிவாதி தாவாச் சொத்திற்கு வடக்கே உள்ள சொத்தை கிரையம் வாங்கிய ஆவணம் SRO கணினி நகல்

**வா.சா.ஆ.–5** ஆகும். கடந்த 04–06–2004 ம் தேதியில் 1 ம் பிரதிவாதியின் மனைவி நாராயணம்மாள் பலகிருஷ்ணன் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கிய ஆவணம் SRO கணினி நகல். **வா.சா.ஆ.–6** ஆகும். 10–05–2024 ம் தேதியில் சர்வே எண்.1405/511 பிக்கு வில்லங்க சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.–7** ஆகும். சர்வே எண். 140/510 க்கு உரிய புல வரைபடம் கணினிநகல் **வா.சா.ஆ.–8** ஆகும். கடந்த 22–07–2024 ம் தேதியில் சர்வே எண். 140/510 க்கு உரிய நத்தம் நிலவரி திட்ட தூயசிட்டா விஏஓ நகல் **வா.சா.ஆ.–9** ஆகும்.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.